**மத்துகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 13 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்துகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக் கணக்கின் மீதி ரூபா 132,093 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்கில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட பதிவேட்டுப் பொருட்களின் கிரயம் ரூபா 3,816,102 தொகை நிதிக் கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | மத்துகம பொதுச் சந்தையின் காணி ரூபா 5,000,000 ஆக நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 16,000,000 ஆக காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 11,000,000 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதன உதவியின் மூலமான பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 113,236,425 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 113,045,149 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 191,276 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (v) | மீளாய்வாண்டின் போது மத்துகம சிறுவர் பூங்காவை நவீன மயப்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,273,550 தொகை மற்றும் இரண்டு காணிகளின் பெறுமதியான ரூபா 1,305,000 தொகை என்பன நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (vi) | மீளாய்வாண்டில் களஞ்சிய பேரேட்டில் காணபட்ட ரூபா 298,770 பெறுமதியான 15 இருப்பு விடயங்கள் நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்படவில்லை. | சகல இருப்புக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மேற்கூறப்பட்ட இருப்பு விடயங்கள் கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (vii) | இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கு வைப்பதற்கு பதிலாக ரூபா 3,726,886 தொகையான புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இருப்பு மெய்மெய்யாய்வை செய்து புத்தக பெறுமதி உறுதிப்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மெய்மெய்யாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

----------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------- | ------------------------ | ----------------------------- |
| (i) | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 62,910,888 தொகையான 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,067,708 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களையும் பட்டோலைகளையும் இணக்கம் செய்து வேறுபாடுகள் சீராக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டில் மூலதனத்திற்கான வருமான பங்களிப்பு கணக்கின் மீதி நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 361,879,185 ஆக இருந்த போதிலும், பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 359,128,059 ஆக காணப்பட்டது. | சரியான மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) பெறவேண்டிய கணக்குகள்**

---------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பல வருட காலம் முதல் அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 358,225 தொகையான வீதி விளக்கு உதவி மீதி மற்றும் ரூபா 96,000 தொகையான தனியார் பேருந்து நிலைய கட்டண மீதிகள் காணப்பட்டன. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கும் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ii) | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 751,929 தொகையான வேலை வைப்பு மீதியை தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

----------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேடு, வைப்புப் பதிவேடு மற்றும் சமப்படுத்தப்பட்ட பேரேட்டு கணக்குகள் காணப்படாமையினால் ரூபா 124,969,002 கூட்டுத் தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போத திருப்திகரமாக | நிலையான சொத்துக்கள், வைப்பு பதிவேடுகள் மூலம் சொத்து மீதி உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன், நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு பேரேட்டு கணக்கு | 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

| | |
|---|---|
| சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | சமப்படுத்த வேண்டியிருந்தமையை கவனத்தில் கொள்ளல் வேண்டும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு | - | கிராம சேவகர் பிரிவுகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட 387 வீதிகள் நில அளவைத் திட்டத்தின் பிரகாரம் அளவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிராம சேவையாளர் பிரிவின் பிரகாரம் இனங்கண்டு நில அளவைத் திட்டத்தின் பிரகாரம் அளக்கப்பட வேண்டும். | சபையின் சில வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2018 திசெம்பர் 16 ஆம் திகதிய 2012 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானி | 257,600 | 11 அறிவித்தல் பதாதைகளில் இருந்து வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவித்தல் பதாதை வருமானங்களை சபைக்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிவித்தல் பதாதை வருமானங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,363,677 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,020,020 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 15,001,942 | 15,778,047 | 10,664,042 | 5,114,005 | 14,776,500 | 14,554,045 | 12,180,632 | 2,373,413 |
| (ii) | வாடகை | 15,174,300 | 7,299,475 | 6,597,131 | 702,344 | 8,944,800 | 10,076,431 | 9,520,911 | 555,520 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,698,500 | 535,180 | 524,180 | 11,000 | 332,000 | 468,628 | 468,628 | - |
| | | 31,874,742 | 23,612,702 | 17,785,353 | 5,827,349 | 24,053,300 | 25,099,104 | 22,170,141 | 2,928,933 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2020 யூன் 30 இல் உள்ளவாறு சபையின் ஆதன வரி நிலுவை 05 வருடங்களை விட பழைய நிலுவை ரூபா 744,748 தொகையும், 03 – 05 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 442,251 தொகையும், 01 – 03 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 523,557 தொகையும் ஒரு | நிலுவை ஆதன வரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஆதன வரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| வருடத்தை விட குறைவான நிலுவை ரூபா 2,430,919 ஆகவும் இருந்தன. | | |
| (ஆ) நிலுவை ஆதன வரி செலுத்தாமை தொடர்பாக ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வரியினை அறவிடுவதற்கு ஆதனங்கள் தடை செய்யப்பட வேண்டும். | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-----------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 35,000,000 தொகையும் நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 3,300,000 தொகையும் காணப்பட்டன. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------------

**3.1 செயலாற்றல்**

----------------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள் | | |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 03 | உப விதிகள் விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | சபை அதிகார பிரதேசத்தில் அமுல்படுத்த முடியுமான 08 விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டுள்ளது என |

| | | | |
|---|---|---|---|
| | பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | | அறியத்தருகின்றோம். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டம்<br>------------------------------------------------- | | |
| (i) | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்திட்டத்தை அமுலாக்கும் கால அட்டவணை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்திட்டங்களை இனங்கண்டு அமுல்படுத்தும் போது கால அட்டவணை இனங்காணப்பட வேண்டும். | 2021 இன் திட்டங்கள் தயாரிக்கும் போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டில் சபை வேலையின் கீழ் ரூபா 11.85 மில்லியன் தொகையான 35 வீதிகள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், அவை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | சபை வேலைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>------------------------------------------------- | | |
| | சபையினால் 11 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் 13 நிகழ்ச்சித் திட்டங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 06 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், 03 நிகழ்ச்சித் திட்டங்களின் செயலாற்றல் செயன்முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் 02 நிகழ்ச்சித் திட்டங்களின் செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு சபை தவறியிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் இனங்காணப்பட்ட செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் திட்டங்களுக்கு ஏற்ப நிதி ஏற்பாடு உள்ளடக்கப்பட்டு அமுல்படுத்தப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 14 வேலைகளின் காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் காலாவதியாவதற்கு முன் விநியோகிக்கப்பட்ட வேண்டும். | கைத்தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் அனுமதிப் பத்திரம் பெற்றிருந்ததுடன், கொவிட் பிரச்சினையினால் ஒரு பகுதியினர் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு வருகை தரவில்லை என அறியத்தருகின்றோம். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை** | | |
| (i) 11 பதவிகளில் 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. உள்ளபடியான பதவியணியினருக்கு மேலதிகமாக நாட்கூலி மற்றும் தற்காலிக அடிப்படையில் 33 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது டன், மிகை பதவியணியினருக் காக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நாட்கூலி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ii) அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் பிரகாரம் 06 பதவிகளுக்குரிய 41 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்குவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்காக தேவையான கோவைகள் அதிகார தரப்பினருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

(ஆ) **ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்தும், மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய முறையே ரூபா 219,525 தொகை மற்றும் ரூபா 69,900 தொகையான மீதிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை மீதியை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்பள்ளி பாடசாலை சேவைகள் இலவசமாக வழங்க வேண்டிய போதிலும், உப விதியொன்று விதிக்கப்படாமல் முன்பள்ளி பாடசாலை மாணவர்களை உள்ளீர்ப்பதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நுழைவுக் கட்டணம் மற்றும் மாதாந்த கட்டணமாக முறையே ரூபா 866,500 மற்றும் ரூபா 506,300 தொகைகள் அறவிடப்பட்டிருந்தது. | உப விதியொன்று விதிக்கப்படாமல் முன்பள்ளி பாடசாலைக் கட்டணம் அறவிடப்பட முடியாது. | 2021 இல் இருந்து இலவசமாக முன்பள்ளி பாடசாலை கல்வி வழங்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | ஹொரணகொட வீதி, ஓவிட்டிகல மத்துகமயில் அமைந்துள்ள அகுறுவகொடெல்ல காணியின் திட்டம் ஏலமிடுவதன் கீழ் 2019 சனவரி 11 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அதன் நிபந்தனை பூர்த்தி செய்யப்படாதிருக்கும் போது அந்த காணியின் 24 உப கூறுத்திட்டங்கள் 2019 செப்தெம்பர் 12 ஆம் திகதியளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | திட்டங்களை அங்கீகரிக்கும் போது திட்டங்களின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். | அபிவிருத்தி செய்யப்பட்ட நிலப் பகுதிக்காக மாத்திரம் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

**3.5 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும், வீதி அபிவிருத்திகாக பாதீட்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 20 மில்லியன் நிதி ஏற்பாட்டிற்காக விரிவான பெறுகைத் திட்டம் மற்றும் கால அட்டவணையின் பிரகாரம் பெறுகைகள் இடம் பெற்றிருக்கவில்லை. | விரிவான பெறுகைத் திட்டம் மற்றும் கால அட்டவணையின் பிரகாரம் பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தார் இட்டு வீதி அபிவிருத்தி செய்யும் போது வீதியின் அடிப்பகுதியை தயாரிப்பதற்காக வீதி செப்பனிடுகை பயன்படுத்தப்பட்ட மணித்தியால எண்ணிக்கை மற்றும் தடவைகளின் எண்ணிக்கை தொடர்பாக உறுதிப்படுத்தப்படாமல் 05 செயற்திட்டங்களுக்கு கல் இட்டு பதிப்பதற்காக ரூபா 601,794 தொகை ஒப்பந்தகார சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | வீதி செப்பனிடல் இயந்திரத்தின் வாசிப்பு மாணியின் பிரகாரம் எவ்வளவு மணித்தியால எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டிருந்தது என உறுதிப்படுத்தப்பட வேண்டும். | கல் இட்டு செப்பனிடப்பட்டதன் பின்னர் தார் இடப்பட்டமையினால் வீதி செப்பனிடுகை இயந்திரம் பயன்படுத்தப்பட்ட நாட்கள் மற்றும் தடவைகளின் எண்ணிக்கை கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை என அறியத்தருகின்றோம். |

**3.7 தீர்வுகாணப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 1.2.1(ஆ), (ஈ), (ஊ) மற்றும் (ஓ) பந்திகள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் செயற்குழுவின் கட்டளைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 2.1.1(ஐ) மற்றும் (ஒ) பந்திகள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டின் கணக்கீட்டு குறைபாடுகள் சரிசெய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |